மறைந்த சீதாராம் யெச்சூரியின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி

சமதர்ம இந்தியாவை உருவாக்க பணியாற்ற வேண்டும்

முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

▶ முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று சென்னை காமராஜர் அரங்கில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த சீதாராம் யெச்சூரி படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் சுலந்து கொண்டு, சீதாராம் யெச்சூரி படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கி. வீரமணி, அசோக் தாவ்லே, கே.பாலகிருஷ்ணன், செல்வப்பெருந்தகை, வைகோ, திருமாவளவன், முத்தரசன், டி.கே. ரங்கராஜன், ஜி.ராமகிருஷ்ணன், காதர் மொய்தீன், எம்.எச்.ஜவாஹிருல்லா, பழ.ஆசைத்தம்பி, உ.வாசுகி.

சென்னை, செப். 24: மதச்சார்பற்ற, சகோதரத்துவ, சமூகநீதி இதை எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமதர்ம இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் அவர் வழியிலே நின்று பணியாற்ற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற சீதாராம் யெச்சூரி படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பேசியதாவது:

சீதாராம் யெச்சூரி மறைவு, என்னை அதிர்ச்சி அடைய வைத்தது. அவருடைய உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தபோதே, நான் அமெரிக்காவில் இருந்து தொடர்பு கொண்டு தொடர்ந்து அவரைப்பற்றி விசாரித்துக் கொண்டே இருந்தேன். எப்படியாவது உடல் நலம் பெற்று அவர் திரும்பி விடுவார் என்று தான் நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால், நம் எல்லோரையும் வருத்தமடைய செய்யும் வகையில், அவர் நம்மை எல்லாம் விட்டு பிரிந்து விட்டார் என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

யெச்சூரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல! எங்களுக்கும் சொந்தம். அனைவருக்கும் சொந்தம். எல்லோருக்கும் சொந்தமானவராக அவர் விளங்கினார். வாழ்ந்தார், வாழ்ந்து காட்டியிருக்கிறார். எடுத்துக்காட்டியிருக்கிறார். வழிகாட்டியிருக்கிறார். இந்தியாவின் கருத்தியல் அடையாளங்களில் ஒருவராக இருக்கிறார் என்றால் நிச்சயமாக நாம் அவரைத் தான் குறிப்பிடவேண்டும். அவரின் இழப்பு என்பது ஒரு கருத்தியலுக்கான இழப்பாக அமைந்துவிட்டது.

இந்த நேரத்தில், சீதாராம் யெச்சூரியைப் பற்றி நான் சொல்லவேண்டும் என்று சொன்னால், கோவையில் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாடுதான் இப்போது என்னுடைய நினைவுக்கு வருகிறது. தலைவர் கலைஞர் நடத்திய அந்த செம்மொழி மாநாட்டில், யெச்சூரி பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். "தமிழ்நாட்டில் எனக்கு ஒரு பங்குண்டு" என்று யெச்சூரி ஆற்றிய உரைதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது. பாலகிருஷ்ணன் தெரிவித்தது போல, 2015-ல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக சீதாராம் யெச்சூரி தேர்ந்தெடுக்கப்பட்டார். "நம்முன் உள்ள முக்கிய பணி, இடதுசாரிகளையும், ஜனநாயகச் சக்திகளையும் ஒருங்கிணைப்பதுதான் என்று பேசினார். இந்தியாவின் எத்தனையோ பல பிரபலமான அரசியல் தலைவர்களை ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் உருவாக்கியிருக்கிறது. அப்படி உருவாக்கி இருக்கக்கூடிய தலைவர்களுள் முக்கியமான தலைவர் தான் யெச்சூரி, ஜே.என்.யு. முழுவதையும் இடதுசாரி கோட்டையாக மாற்றிய பெருமை யெச்சூரிக்குத் தான் உண்டு. அதனால் தான் அவரது உடல் ஜே.என்.யுவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இது அவரின் அறிவாற்றலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தேவகவுடா, குஜ்ரால் ஆகியோர் பிரதமர்களாக பதவி வகித்த காலத்தில் இடதுசாரிகளின் பங்களிப்புக்குப் பின்னணியில் இருந்து பெரும் பங்காற்றியவர். 1996-க்கு பிறகு ஒன்றியத்தில் கூட்டணி அரசுகள் உருவான காலத்தில், கூட்டணி அரசுகளை அமைப்பதில் இடதுசாரிகள் மிக மிக முக்கியப் பங்கு வகித்தார்கள். ஜனதா தளத்தின் தேவகவுடா பிரதமரான போதும், அதன்பிறகு ஐ.கே.குஜ்ரால் பிரதமரான போதும் தி.மு.க. பங்கேற்ற ஐக்கிய முன்னணிக்கு இடதுசாரிகள் ஆதரவு அளித்தார்கள். அப்போது ஹர்கிஷன் சிங் சுர்ஜித்தின் 'படைத் தளபதியாக' செயல்பட்டவர். அன்றைக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளில் சீதாராம் யெச்சூரியும் கலந்து கொண்டு தன்னுடைய ஆழமான கருத்துக்களை எல்லாம் பதிவு செய்திருக்கிறார். ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது, குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்கியதில் முக்கியமான காரணகர்த்தாவாக விளங்கியவர்.

இப்போது நாம் உருவாக்கியிருக்கும் இந்தியா கூட்டணிக்கு முக்கிய காரணகர்த்தாக்களில் ஒருவராக விளங்கியவர் யெச்சூரி. சில கட்சிகளோடு முரண்பாடு இருக்கலாம். ஆனால், முரண்பாடுகள் இருந்தாலும் அதையும் தாண்டி அகில இந்திய அளவில் பா.ஜ.வை வீழ்த்த எல்லோரும் கைகோத்தாக வேண்டும் என்ற உறுதியோடு இருந்து அந்த பணியை வெற்றிகரமாக நடத்தி காட்டினார். இந்தியா கூட்டணி இந்தளவுக்கு வெற்றி பெற முக்கியமான காரணகர்த்தாவாக இருந்தார்.

சீதாராம் யெச்சூரி சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியிருக்கிறார். சீதாராம் யெச்சூரி விட்டுச் சென்றுள்ள பணிகளை எல்லாம் நாம் எல்லோரும் தொடர்ந்து தொய்வில்லாமல் தொடர வேண்டும்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தொடங்கி 100 ஆண்டுகள் கடந்திருக்கும் நிலையில், அதன் ஆளுமைகளாக வலம் வந்த தலைவர்களின் வரிசையில், தனக்கென தனி இடம் பெற்று புகழ் மிக்க தலைவராக வாழ்ந்து காட்டியிருக்கிறார். கல்வியையும், அதன் மூலம் பயின்ற அரசியலையும் சமூக மாற்றத்துக்காக பயன்படுத்தியவர். மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்க வேண்டும், சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க வேண்டும், சமூக நீதி இந்தியாவை உருவாக்கவேண்டும். இதை எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமதர்ம இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் அவர் வழியிலே நின்று பணியாற்ற வேண்டும். இவ்வாறு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

யெச்சூரி பேசியதை இப்போதும் மறக்க முடியாது

கலைஞர் மறைவிற்கு பிறகு திமுக சார்பில், இரங்கற்கூட்ட நிகழ்ச்சிகளை ஒவ்வொரு மாவட்டமாக நடத்தினோம். அதில் ஒன்று திமுக நடத்திய "தெற்கில் உதித்தெழுந்த சூரியன்" புகழஞ்சலிக் கூட்டம் ஒன்று. அந்த நிகழ்ச்சியின்போது சீதாராம் யெச்சூரி பங்கேற்று கலைஞர் பற்றி புகழ்ந்து பேசினார். யெச்சூரி பேசுகிறபோது குறிப்பிட்டார். சென்னையில் பிறந்த அவருக்கு தமிழ் பேசத் தெரியும் என்றாலும், மற்ற மாநிலங்களில் வந்திருக்கக்கூடிய தலைவர்களுக்கு புரியாது என்று ஆங்கிலத்தில் முழுமையாக பேசினார். தமிழ்நாடு இல்லாமல் இந்தியா இல்லை, கலைஞர் இல்லாமல் தமிழ்நாடு இல்லை என்று பேசினார்.

அதைத் தொடர்ந்து பேசும்போது அவரின் தமிழ் மட்டும் பிரபலம் அல்ல, அவரின் நகைச்சுவை உணர்வும் ரசிக்கத்தக்கது. மாக்சிம் கார்க்கியின் தாய் காவியத்தின் மூலம் மக்களுக்கு தொடர்ந்து முற்போக்குச் சிந்தனைகளை விதைத்தவர் கலைஞர்" என்று அந்த புகழஞ்சலிக் கூட்டத்தில் சீதாராம் யெச்சூரி உணர்வு பூர்வமாக பேசியதை என்னால் இப்போதும் நிச்சயமாக என்னால் மறக்க முடியாது.

அந்தளவுக்கு கலைஞர் மீது அன்பு கொண்டவர், பாசம் கொண்டவர். என் மீது கூட அளவு கடந்த பாசத்தை வைத்திருந்தார். கூட்டணிப்பற்றி பேசிக் கொண்டிருந்தபோது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தலைவர்கள் முரண்பிடித்தாலும் அவர் தான் சரி செய்து சிரித்த முகத்துடன் முடித்துக் கொடுப்பார்.

அது எல்லாம் பசுமையாக நினைவிற்கு வருகிறது. அவருடைய புன்சிரிப்பையும் நம்மால் என்றைக்கும் மறக்க முடியாது. எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சிரித்த முகத்தோடு தான் பேசுவார். எந்தக் கருத்தையும் சொல்வதாக இருந்தாலும் அதையும் சிரித்த முகத்தோடுதான் சொல்வார் என்று முதல்வர் பேசும்போது குறிப்பிட்டார்.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்டிவ்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி எண்.8(6) கீழ் உடன் விதி எண்.9(1) படிக்கவும்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து நிதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு'** மேலும் **'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 10–10–2024** நாளில் விற்பனை செய்யப்ப உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **10–10–2024** நாளில் பிற்பகல் **2.00** மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: **டாடா கேபிடல்** ஹவுசிங் பைனான்ஸ் **லிமிடெட்,** முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், **எண்.6A,** டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் **09–10–2024 அன்று மாலை 5 மணி வரை** அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி **'உள்ளது உள்ளவிடத்தில்** நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
1.	TCHHL04040 00100077049 & TCHIN040400 0100077176	திருமதி. அபிராமி G, திருமதி.அலமேலு G	ஒப்பந்த எண். TCHHL04040001000077049 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.24,12,733/– மற்றும் ஒப்பந்த எண்.TCHIN04040001000077176 இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,42,392/–மொத்தம் ரூ.2555125/– & 24.03.2023	ரூ. 23,75,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து எழுபத்தைந் தாயிரம் மட்டும்)	ரூ.2,37,500/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தேழு ஆயிரத்து ஐந்நூறு மட்டும்)	கையகம்

அசையா சொத்தின் விவரங்கள்: திருநீர்மலை கிராமம், பல்லாவரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தின் பழைய சர்வே எண்கள் 295 & 296, பட்டா எண் 8504 இன்படி, புதிய சர்வே எண் 295/1 & 296/6 இல் அடங்கிய D.T.P. No.9/73 மூலம் அனுமதிபெற்ற மனைப்பிரிவு, மனை எண் 9, ரங்கா நகரில் உள்ள அனைத்துத் துண்டு மற்றும் பகுதி அடங்கிய நிலம் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண் 8, **தெற்கில்:** மனை எண் 10, **கிழக்கில்:** 20 அடி சாலை, **மேற்கில்** S.No.75 இன் பகுதி, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்–76 அடி 6 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்– 73 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–40 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்–40 அடி 6 அங்குலம். பம்மல் சார்–பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை – B சொத்து:** அட்டவணை – A சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 225 சதுர அடி பரப்பளவு, ஒரு கார் நிறுத்துமிடத்துடன் (பொதுப் பரப்பு & பொதுப் பங்குகள் உட்பட 645 சதுர அடி அடிமட்டப் பரப்பு உள்ள, இரண்டாம் தளத்தில், ஃபிளாட் எண் AS–3 இல் உள்ள சொத்து.

2.	TCHHL04040 00100073924 & TCHIN040400 0100074601 & TCHIN040400 0100104380 & TCHIN040400 0100188217	திரு. மகேஷ் R திருமதி.பூஜா M	கடன் கணக்கு எண். TCHHL0404000100073924 இன்படி உங்களால் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகை ரூ.22,56,014/– மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100074601 இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.68,975/ மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100104380 இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,58,913/– மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100188217 இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டியநிலுவைத் தொகை ரூ.5,16,602/–மொத்தம் ரூ.33,00,504/– & 21.09.2023	ரூ. 27,00,000/– (ரூபாய் இருபத்து ஏழு லட்சம் மட்டும்)	ரூ.2,70,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	கையகம்

அசையா சொத்து விவரங்கள் அட்டவணை A: திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ஆயத்தூர் கிராமம், சர்வே எண்கள்: 297, 293/3, 293/4 பட்டா எண்.656 இன்படி புதிய சர்வே எண்: 293/7& 297/3, மனை எண்.28–B, பவானி நகர் லேஅவுட்டில் (லேஅவுட் அனுமதி எண்.DTCP No.471/92 இன்படி) உள்ள 900 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண்.7, **தெற்கில்:** 30 அடி அகல சாலை, **கிழக்கில்:** ஏ.ரேணுகாதேவிக்குச் சொந்தமான மனை எண்.28–A, **மேற்கில்:** மனை எண்.29. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 18 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 18 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 50 அடி. மொத்த பரப்பளவு 900 ச.அடி. **அட்டவணை–B,** தரைத்தளம் 750 ச.அடி கட்டுமான பகுதியுடன் கூட இதர 100 ச.அடி கழிவுத்தொட்டி, மாடிப்படி, மின் சேவை, முன் உயர்நிலை வேலைகள், சுற்றுச்சுவர் உள்ள சொத்து.

3.	TCHHL04900 00100066361 & TCHIN049000 0100066427	திருமதி.ரேவதி B, M/S பிரீத்திநிக்வேர் திரு.பாலாஜி M	கடன் கணக்கு எண். TCHIN0490000100066427 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.44,956/– மற்றும் கடன் கணக்கு எண். TCHHL0490000100066361 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.29.69,284/– மொத்தம் ரூ.30,14,240/–(ரூபாய் முப்பது லட்சத்து பதினான்காயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) மொத்தம்) & 19.12.2023.	ரூ. 32,50,000/– (ரூபாய் முப்பது இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ.3,25,000/– (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	கையகம்

அசையா சொத்து விவரங்கள்: மனை எண்.16, பரப்பளவு 1602 ச.அடி, மனை எண்.17 பரப்பளவு 1602 ச.அடி மொத்த பரப்பளவு 3204 ச.அடி, சர்வே எண்.93/33, பட்டா எண்.1259, ஓம்ஸ் கிரீன் சிட்டி என்று பெயரிடப்பட்டுள்ள லேஅவுட்டுக்கு (D.T.C.P.vide Lp/ Dtcp எண்.256/2019, தேதி.30.05.2019) மனைத்திட்டத்தில், இது கிராமம் எண்.152, வட்டம்பாக்கம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதியைக் கொண்ட காலி வீட்டு மனை உள்ள சொத்து. மனை எண்.16 இன் **எல்லைகள்: வடக்கில்:** 23 அடி சாலை, **தெற்கில்:** சர்வே எண்.93/34 இல் உள்ள காலி மனை, **கிழக்கில்:** மனை எண்.15, **மேற்கில்:** மனை எண்.17 இன் **அளவீடு: வடக்குப் பக்கம்**–36 அடி, **தெற்குப் பக்கம்**–36 அடி, **கிழக்குப் பக்கம்–44.6 அடி, மேற்குப் பக்கம்–44.6 அடி,** மொத்த பரப்பளவு 1602 ச.அடி. மனை எண்.17 இன் **எல்லைகள்: வடக்கு:** 23 அடி சாலை, **தெற்கு:** சர்வே எண்.93/34 இல் உள்ள காலி மனை, **கிழக்கு:** மனை எண்.16, **மேற்கு:** மனை எண்.18 **அளவீடு:** வடக்குப் பக்கம் –36 அடி, தெற்குப் பக்கம் –36 அடி, கிழக்குப் பக்கம் –44.6 அடி, மேற்குப் பக்கம் –44.6 அடி, **அனைத்து பரப்பளவு 1602 ச.அடி.** மனை எண்கள்.16,17 அனைத்து அளவீடு (1602+1602) மொத்தம் 3204 ச.அடி நிலம் காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

4.	TCHIN040 400010012 6410 & TCHHL040 400010012 6043	திரு.ரிச்சர்டு ராஜதுரை கிருஷ்ணன், திருமதி.செல்வி R	கடன் கணக்கு எண். TCHHL0404000100126043 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.19,69,127/– மற்றும் கடன் கணக்கு எண்.TCHIN0404000100126410 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.96,656/– மொத்தம் ரூ.20,65,783/–& 23.08.2023.	ரூ. 19,00,000/– (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்)	ரூ.1,90,000/– (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்)	கையகம்

அசையா சொத்து விவரங்கள்: காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, எண்.43, வடமங்கலம் கிராமம், மாவட்டம், சர்வே எண்.223/1 &223/2, மனை எண்.7, ஸ்ரீ ஸ்ரீனிவாச வி நகர், (DTCP அங்கீகார எண்.280/2006), 1906 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் உடைய சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண்.6 **தெற்கில்:** காலி நிலம் **கிழக்கில்:** காலி நிலம் **மேற்கில்:** 30 அடி லேஅவுட் சாலை **அளவீடு:** கிழக்கில் இருந்து மேற்கு வடக்குப் பகுதி: 60 அடி, கிழக்கில் இருந்து மேற்கு தெற்குப் பகுதி: 60.1 அடி, வடக்கில் இருந்து தெற்கு கிழக்குப் பகுதி: 33.6 அடி, வடக்கில் இருந்து தெற்கு மேற்குப் பகுதி: 30 அடி மொத்தம் பரப்பளவு 1906 ச.அடி

இது சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் உள்ளது.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர் (கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்கும்விதமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

கவனிக்க: மின்–ஏலம் ஆனது https://www.bankauctions.in என்ற இணைய முகப்பு மூலம் 10–10–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:

1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** நிர்ணய விலைக்கு குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. **3. ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் TATA CAPITAL HOUSING FINANCE LTD பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியின் பேரில் 27–09–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், ஏலமிடப்பட்ட சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும்.

9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக செலுத்த வேண்டும். 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15 ஆவது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணம்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஏலம் எடுத்தவர் சம்பந்தபட்ட நிலம்/ தொகை தொடர்பாக எந்த உரிமையையும் கோர முடியாது. **11.** மேற்கூறப்பட்டசொத்து தொடர்பான **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்குத்** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் பற்றியும், மேலும் அந்த சொத்து தொடர்பான சொத்தின் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற விவரங்கள் மற்றும் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்